Vol. 7 | Special Issue 1 | MARCH 2020

SHANLAX
#SINCE1990

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

P-ISSN 2321-788X

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் – 627 425

தமிழ்த்துறை

மற்றும்

Shanlax International Journal of
Arts, Science And Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

பதிப்பாசிரியர்

பேரா. ச. கண்ணகி

SIJASH NAAS Rated Journal
NAAS Score 2.13

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

PKP PUBLIC KNOWLEDGE PROJECT

OJS OPEN JOURNAL SYSTEMS

SHANLAX INTERNATIONAL JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

முனைவர். த. மினி.
Tamil Dep


SHANLAX
#SINCE1990

# SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

Vol. 7 Special Issue 1 March, 2020

P-ISSN: 2321-788X Impact Factor: 3.025


**Thiruvalluvar College**
*Papanasam*

SHANLAX
#SINCE1990

**Shanlax International Journal of Arts, Science and Humanities**
*Madurai*

**இணைந்து நடத்தும்**

தேசியக் கருத்தரங்கம்

# "ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்"


பதிப்பாசிரியர்

பேரா. ச. கண்ணகி


**தொகுதி 8**

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

## (தேசியக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | பேரா. ச. கண்ணகி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2020 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>திருவள்ளுவர் கல்லூரி<br>பாபநாசம் - 627 425<br>திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு |
| கணினிஅச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 190 |

**ISSN : 2321-788X**

National Tamil Conference on **ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்**

| | | |
|---|---|---|
| Editor | : | Prof. S. Kannaki |
| Copy Right | : | Editor |
| First Edition | : | March, 2020 |
| Published | : | Department of Tamil<br>Thiruvalluvar College<br>Papanasam - 627 425<br>Tirunelveli (Dist)., Tamil Nadu |
| Printed at | : | Shanlax Press |
| Pages | : | 190 |

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | வெள்ளிவீதியாரின் வரலாற்று வரைவியல்<br>**முனைவர் கு. நீதா** | 1 |
| 2 | பட்டினப்பாலை உணர்த்தும் பழந்தமிழர் பண்பாடு<br>**முனைவர் வீ. கவிதா** | 5 |
| 3 | குறுந்தொகைக் காட்டும் உயிரினங்கள்<br>**முனைவர் வே. சித்ரா** | 9 |
| 4 | சங்கப் பாடல்களில் நடுகல் வழிபாடு<br>**முனைவர் மு. கார்த்திகா** | 13 |
| 5 | புறநானூற்றில் அரசர் புலவர் உறவு<br>**பா. ஜில் டேனியல் தங்கராஜ்** | 17 |
| 6 | புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறைப் பாடல்கள்<br>**முனைவர் க. இரதிகுமாரி** | 22 |
| 7 | சங்க இலக்கியத்தில் சமுதாய வாழ்க்கை<br>**முனைவர் இரா. ரனிதா** | 26 |
| 8 | புறநானூறு காட்டும் விருந்தோம்பல்<br>**ஜெ. சவிதா** | 30 |
| 9 | உளவியல் நோக்கில் சங்க இலக்கியம்<br>**மு. சண்முகவடிவு தேவதாஸ்** | 34 |
| 10 | சங்க இலக்கியங்களில் சிவ வடிவங்கள்<br>**மா. ஜெயக்குமார்** | 37 |
| 11 | குறுந்தொகையில் பறவைகள்<br>**முனைவர் செ. செபஸ்டெல்லா** | 42 |

| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 34 | அகநானூற்றில் உளவியல்<br>**வி. ஜினிதா வின்ஸ்** | 137 |
| 35 | சங்ககாலப் பெண்பாற் புலவர்கள்<br>**முனைவர் சகோ.க. மங்களசுந்தரி** | 140 |
| 36 | புறநானூற்றில் நீர்நிலைகள்<br>**முனைவர் த. மினி** | 143 |
| 37 | சங்க இலக்கியங்கள் காட்டும் நீர்நிலைகள் - வெ. இறையன்பு பார்வை<br>**மு. கற்பகம்** | 146 |
| 38 | பெண்மை பெற்ற பெருமதிப்பு - பாரி மகளிர்<br>**க. இராஜா சீநிவாசன்** | 149 |
| 39 | புறநானூறும் சமூகமும்<br>**மு. பொன்னி** | 155 |
| 40 | அகநானூறு கூறும் சிறப்பியல்புகள்<br>**முனைவர் ஏ. ராணி** | 160 |

# புறநானூற்றில் நீர்நிலைகள்

***முனைவர் த. மினி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு

**Volume:** 7
**Special Issue:** 1
**Month:** March
**Year:** 2020
**P-ISSN:** 2321-788X

### முன்னுரை

சங்க காலத்தில் வாழ்ந்த நம் தமிழ் மக்கள் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றை சேமித்து வந்துள்ளனர். புறம் என்ற சொல்லாட்சிக்குத் தமிழ் இலக்கிய உலகில் சிறப்புப் பொருளுண்டு. குறிப்பாக வீரம் என்ற பொருளில் சங்கப் பாடல்களில் புறநானூறு அடையாளமிட்டு வழங்கப்படுகின்றன. போருக்கு நிகராக வள்ளாண்மை, நட்பு, தமிழர் தம் உயரிய கொள்கை எனப் பலவும் சிறப்பாக கூறப் பட்டுள்ளன. அவ்வகையில் புறநானூற்றில் காணப்படும் நீர்நிலைகள் குறித்த செய்திகள் இக்கட்டுரையில் அமைகிறது.

### நீர்நிலைகள்

மழைநீரை சேமித்து வைப்பதற்கான நீர்நிலைகளை அமைப்பது என்பது முக்கியமான ஒன்றாகும். இதனையே,

**"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பு முயிரும் படைத்திசினோரே
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணூரகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் நாட்டு உதவாதே: அதனால்
அடுபோர்ச் செழிய! இகழாது பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"**

**(புறநானூறு 18: 21-30 ப.70)**

நீர் இல்லா நிலத்தில் நீர்நிலை உண்டு பண்ணுதல், ஆறு, ஏரி, குளம் முதலியவற்றால் நீர் வருவாயின்றி மழை வருவாயொன்றையே நோக்கிப் புன்செய் நிலங்கள் இருக்கின்றது என்று புறநானூறு கூறுகின்றது.

மேலும் நீர் அதிகமான பகுதிகளில் மீன்கள் உலவும், நீர் நிறைந்த குளங்களில் குவளையும், தாமரையும் மலர்ந்து விளங்கும் நீர் வளம் வாய்ந்த ஊரின் சிறப்பினை,

***"கீழ்நீரான் மீன் வழங்குந்து***
***மீநீரான் கண் அன்ன மலர் புக்குந்து***
***கழி சுற்றிய விளை கழனி***
***அரிப் பறையான் புள் ஓப்பந்து"***
***(புறம் 396, 1-4. பக்கம்:867)***

என்று புறநானூற்றுப் பாடல் எடுத்து இயம்புகிறது.

**நீர்நிலைத் தேக்கங்கள்**

மழைநீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர்நிலைகள் அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்று புறநானூறு வலியுறுத்துகின்றது, பெருகி வரும் நிரின் விசையைக் கட்டுப்படுத்த வேண்டும், என்றெண்ணியே சங்கத் தமிழர்கள் குளங்களை அமைப்பதிலும், அணைகளைக் கட்டுவதிலும் ஈடுப்பட்டுள்ளனர். நீரின் விசையைக் கட்டுப்படுத்த குளங்களின் கரை எட்டாம் பிறையைப் போல் அமைக்கப்படடிருந்தது என்பதை,

***"அறையும் பொறையும் மணந்த தலைய***
***எண்நாள்திங்கள்அனையகொடுங்கரைத்***
***தெள்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ"***
***(புறம் 118, 1-3, பக்கம்-274)***

எனக் குறிப்பிடுவதன் மூலம் ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதைப் புறநானூறு வழி அறியமுடிகிறது. ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால் அதிகநீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும்போதே ஏற்படும். இது ஏரி வடிவமைப்பில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பாகும்.

**நீரின் பயன்பாடு**

புறநானூறு பாடல்களில் நீர் சார்ந்த கருத்துப்புலன்கள் மிகுதியாக இருக்கின்றது. மழைநீர் தொடங்கி அனைத்து வகை நீர்நிலைகளையும் பயன்பாட்டு முறையில் எடுத்தியம்புகின்றது. நாவலம் தண்பொழில் என்று சொல்லக்கூடிய தமிழகம் நீர்வளம் மிக்கது. நீரின் அடிப்படை ஆதாரங்கள் இன்றியமையாத ஒன்று. அதனால் தொல்காப்பியம் நிலம், நீர், விசும்பு, தீ, வளி கலந்த இந்த உலகம் என்கிறார். வறட்சியான இடம் குறித்த கருத்துகள் வருமாறென்றால் நீரின் இன்றியமையாமை புறநானூற்றில் அழுத்தமுற பதிவு செய்யப்பெற்றுள்ளன. அதனை,

***"ஊர் இல்ல, உயவு அரிய,***
***நீர் இல்ல, நீள் இடைய"***
***(பக்கம் 7 புறம்: 3,17-18)***

என்னும் வரிகளால் அறியலாம்.

உணவு, உடை, உறையுள் என அனைத்திற்கும் நீரின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை மெய்ப்பிக்கும் வகையில்,

***"நீரின்றி அமையா யாக்கைக்கும் எல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***
***உண்டி முதற்றே உணவின் பிண்டம்"***
***(புறம் 18: 18-20. பக்கம்:50)***

என்ற பாடலில் நீரின் பயன்பாட்டில் உழவுத் தொழில் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

**நீர்நிலைகளின் இன்றியமையாமை**

இவ்வுலகம் கடலினை எல்லைப் பரப்பாக கொண்டது என்று புறநானூறு சுட்டுகின்றது அதனை,

***"இமிழ்திரைப்***
***பௌவம் உடுத்த இப்பயம் கெழு***
***மாநிலம்" (புறம் 58,20-1.பக்கம் 154)***

**நீர்நிலை பாதுகாப்பு**

புற அரசியலில் எல்லைகளாகக் கருதப்பட்ட நீர்நலைகளை பராமரிக்க காவலர்கள் பணியமர்த்தப் பட்டிருந்தனர்.

குளங்களில் மழைக் காலங்களில் ஏற்படும் கரை உடைப்பு போன்றவற்றைச் சரிசெய்ய காவலர்கள் நியமிக்கப் பெற்று நீர்நிலைகள் பராமரிக்கப் பட்டதை,

**"என்நாள் திங்கள் அனையக் கொடுங்கரைத்
தெள்நீர் சிறுகுளம் கீள்வது மாதோ"**
***(புறம் 118, 2-3.பக்கம் 274)***

என்ற அடிகளால் அறியலாம்

**முடிவுரை**

நீர்நிலைகளானது மனிதனின் அகம், புறம் என்ற இரு வேறுபட்ட வாழ்வியலிலும் இன்றியமையாத பங்கு வகித்தமை, அவற்றை நுட்பமாகக் குறிப்பிட்டமையை அறிவ தோடு புற உலகில் நீர்நிலைகளுக்கான அடையாளம் வேறு வடிவினத்தால் கையாளப்பட்டுள்ளதை புறநானூறு பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றது.

Vol. 7 Special Issue 1 March 2020

P-ISSN: 2321 - 788X NAAC Score: 2.13

SHANLAX
INTERNATIONAL JOURNALS

SHANLAX #SINCE1990

editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

A Peer-Reviewed-Refereed-Scholarly Indexed Quarterly Journal

திருவள்ளுவர் கல்லூரி
(தேசியத் தரமதிப்பீட்டில் B++ தகுதி பெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் - 627 425
தமிழ்த் துறை

மற்றும்

Shanlax International Journal of
Arts, Science and Humanities

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

# ஆய்வியல் நோக்கில் சங்க இலக்கியம்

# Certificate
OF PUBLICATION

We hereby certify that

முனைவர் த. மணி

In recognition of the Publication of the Paper Entitled

புறநானூற்றில் நீர் நிலைகள்

Published in

SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

பேரா. ச. கண்ணகி
அமைப்பாளர்

முனைவர் சு. சிவசங்கர்
துறைத்தலைவர்

முனைவர் சு. சுந்தரம்
முதல்வர்

**Dr. N. Ayyanathan**
Editor in Chief

**Er. S. Lakshmanan**
The Publisher